FREE EDITION

January - 2017



# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 10 : சுடர் 11 - 119

ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்

**சக்தி மாலை – இருமுடி விழா**

இருமுடி செலுத்துதல்

*14.12.2016 முதல்*
*08.02.2017 வரை*

**ஆன்மிககுரு**
**அருள்திரு அம்மா**

தன் திருக்கரங்களால்
ஏற்றி வைக்கவிருக்கும்

**ஏக ஜோதியான**
**தைப்பூச ஜோதி**
**09.02.2017**




# இன்னல் தணிக்கும் இருமுடி!

**வேம்பு**

## பொன்னான வாய்ப்பு

அன்னை ஆதிபராசக்தி இந்த அவதார காலத்தே மக்கள் துயர் தீர்க்க ஏற்படுத்திக் கொடுத்துள்ள வாய்ப்புகளில் பொன்னான வாய்ப்பு இருமுடி! சக்திமாலை அணிந்து விரதம் இருந்து இருமுடி செலுத்துபவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியே அன்னை இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறாள்.

சக்தி மாலையை அணிவது எப்படி? இருமுடி ஏந்துவது எப்படி? அதற்கான முறைகளையும் நியமங்களையும் அன்னை அருள்வாக்கின்போது சுமார் ஒரு மணி நேரம் நின்ற நிலையில் சொல்லச் சொல்ல அவற்றை உடனிருந்து எழுதி அதன்பிறகே பக்தர்களுக்கும் மன்றங்களுக்கும் வெளியிடப்பட்டன.

## இருமுடி விளக்கம்

“இருமுடி செலுத்துவது உன்னுடைய அழுக்குகளை நீக்கிக்கொள்ளவே! உன்னுடைய உள்ளத்தில் உள்ள அழுக்கு! உன் குடும்பத்தில் உள்ள அழுக்கு! இவ்விரண்டு அழுக்குகளையும் நீக்கிக்கொள்ளவே இந்த இருமுடி! ஒழுக்கம், கட்டுப்பாடு இன்றி நீ செலுத்தும் இருமுடியால் பயனில்லை”என்பது அன்னையின் அருள்வாக்கு.

## உள்ளத்து அழுக்கு

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன நம் உள்ளத்தில் உள்ள அழுக்குகள். இவை மனிதனைப் பிறவிதோறும் தொடர்கின்றன. அதன் விளைவாகவே துன்பங்களும் தொடர்கின்றன.

ஒவ்வொரு மனிதனைச் சுற்றியும் ஓராயிரம் வினைமுடிச்சுகள் பின்னிக் கிடக்கின்றன. அதன் விளைவாகவே கவலையும், துன்பங்களும் தொடர்கின்றன.

## காரணமும் - காரியமும்

வாழ்க்கையில் நாம் படும் அல்லல்களுக்குப் பின்னாலே வலிமையான ஒரு காரணம் இருக்க வேண்டும். காரணமில்லாமல் காரியம் இல்லை என்பது பிரபஞ்ச விதி. மனித வாழ்க்கைக்கும் அதுவே விதி என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

“எங்கெங்கே அதிக அளவில் சக்தி மாலை அணிந்து
இங்கு வந்து இருமுடி செலுத்துகிறார்களோ அங்கே அழிவுகள் அதிகம் இருக்காது”

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**

## செய்திச்சுடரில்...

**இன்னல் தணிக்கும் இருமுடி**

Page: 1 – 3

**UPCOMING EVENTS**

**Melbourne: 4, 13, 14**

**Sydney: 5, 12**

**திருமதி அம்மா பதில்கள்**

பக்கம்: 14

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**

பக்கம்: 7 - 13

**Divine Miracles**

**Page: 4**

**சித்தர்பீட விழாக்கள்**

பக்கம்: 17

**ஆன்மிக நாட்குறிப்பு**

பக்கம்: 18

# இன்னல் தணிக்கும்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இன்பமும், துன்பமும் வாழ்க்கையில் வருவது இயற்கை என்று லேசாகச் சொல்லிவிட்டு அறிவுஜீவிகள் சமாதானம் அடைகிறார்கள்.

## மேல்நாட்டுச் சிந்தனை – இந்திய நாட்டுச் சிந்தனை

துன்பங்கள் தற்செயலாக வருபவை என்று மேலைநாட்டுச் சிந்தனையாளர்கள் சொல்லி வருகிறார்கள். துன்பங்களுக்கு மூலகாரணம் என்ன? என்று நம் நாட்டு ஞானிகளும் ரிஷிகளும் துருவித்துருவி ஆராய முயன்றார்கள். அதன் விளைவாகவே ஊழ்வினை – மறுபிறவிக் கொள்கைகள் தெரிய வந்தன.

துன்பங்கள் ஏன் வருகின்றன? அவரவர் ஊழ்வினையால் வருகின்றன என்று பொதுவாகச் சொல்லிவிடுகின்றனர். உன் உள்ளத்தில் உள்ள அழுக்கு உன் குடும்பத்தில் உள்ள அழுக்கு என்று அன்னை குறிப்பிட்டுச் சொல்கிறாள்.

ஒவ்வொருவர் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களுக்கும், துன்பங்களுக்கும், ஊழ்வினைக்கும் தொடர்பு உண்டு.

## உன் உள்ளத்து அழுக்கு

தனிப்பட்ட முறையில் நாம் இந்தப் பிறவியிலும், பழம் பிறவிகளிலும் சேர்த்துக்கொண்ட பாவங்களின் தொகுப்பையே உன் உள்ளத்து அழுக்கு என்கிறாள் அன்னை.

## குடும்ப அழுக்கு

குடும்பத்திலே இருந்த முன்னோர் செய்த பாவங்கள், குடும்பத்தலைவன் செய்த பாவங்கள் மற்றும் பிற காரணங்களின் தொகுப்பைக் "குடும்ப அழுக்கு" என்கிறாள் அன்னை.

அன்னையின் அருள்வாக்கிலிருந்தும், பல பக்தர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும் நாம் புரிந்து கொண்ட உண்மைகள் சில:

- முற்பிறவியில் செய்த ஊழ்வினை காரணமாகச் சில கஷ்டங்கள் வருகின்றன.
- குடும்பத்தில் முன்னோர் செய்த பாவங்கள் காரணமாகவும் சில கஷ்டங்கள் வருகின்றன.
- இறந்துபோன தாய் தந்தையரை நினைத்து, அவர்களின் ஆன்மா சாந்தி அடையவும் அவர்கள் நற்கதி அடையவும் அவர்தம் வாரிசுகள் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. அது கருதியே அவர்களை நினைத்து திதி, திவசம், சிரார்த்தம் அமாவாசை தர்ப்பணம் என்ற ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவற்றைச் செய்யாது விட்டால் பிதிர்பாசம், பிதிர் தோஷம் வரும் என்று சோதிட நூல்கள் எச்சரிக்கின்றன. பல குடும்பங்களில் இவை செய்யப்படுவதில்லை. அதனால் சில குடும்பங்கள் துன்பப்படுகின்றன.
- வயிறு எரிந்து ஒருவர் சாபமிட்டால் அது நம்மைப் பாதிக்கும். எண்ணத்திற்குச் சக்தி உண்டு. யாரோ இட்ட சாபத்தால் வெந்து தவிக்கும் குடும்பங்கள் உள்ளன.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# இன்னல் தணிக்கும்....

(2ஆம் பக்க தொடர்ச்சி)

- அநியாயம், அக்கிரமம் செய்து சேர்த்து வைத்த சொத்தை அனுபவிக்கிற சில குடும்பங்கள் அல்லல்படுகின்றன.
- தோஷமுள்ள மனையில் வீடு கட்டிவிட்டு அதனால் சில பிரச்சனைகள் ஏற்பட்டு அவதிப்படுகிற குடும்பங்கள் உள்ளன.
- சில குடும்பங்களில் தீய ஆவிகள், துர்தேவதைகள் ஆதிக்கம் செலுத்துவதால் அல்லல்படுகின்றன.
- சில வீடுகள் கட்டிடக்கலை அளவுப்படி அமையாததாலும், வாசற்கதவின் அளவு சரியானபடி அமையாததாலும் கூட பிரச்சினைகள் ஏற்படுகின்றன.
- எதிரிகளின் பொறாமை காரணமாக வைக்கப்பட்ட ஏவல், பில்லி, சூனியம் வைப்பு ஆகியவற்றால் சில குடும்பங்கள் அல்லல்படுகின்றன.
- இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் புரிந்துகொள்ள முடியாத தேவரகசியங்கள் உண்டு. பிறவி இரகசியங்கள் உண்டு.

இவனுக்கு இந்தக் கஷ்டம் எதனால் வந்தது என்று பரம்பொருளான அன்னை மட்டுமே அறிவாள். “குடும்ப அழுக்கு” என்று அன்னை குறிப்பிடுவதில் - மேற்கண்டவையும் அடங்கும்.

## சமுதாயப் பிரச்சனை

இவை தனிமனிதப் பிரச்சனைகள். இவை தவிர சூழல், சமுதாய அமைப்பு, உத்யோக வர்க்கம், பொருளாதார அமைப்பு ஆகிய பொதுவான காரணங்களினால் நாட்டு மக்கள் அவதிப்படுகின்றார்கள்.

பஞ்சம், வறட்சி, வெள்ளம் முதலிய இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகள் வேறு.

## இலவச இருமுடி

பெருவாரியான கிராம மக்களுக்கு இருமுடி போட்டு உன் சொந்தச் செலவில் அழைத்து வா! என்கிறாள் அன்னை. அதன் மூலம் அப்பகுதியில் ஆன்மிக உணர்வு பெருக வித்திடுகின்றாள்.

இதெல்லாம் புரியாமல் இலவச முடியின் நோக்கம் புரியாமல் சிலர் அலட்சியமாக விட்டு விடுகின்றார்கள்.

தனி மனிதப் பிரச்சனைகள் தீரவும் சமுதாயப் பிரச்சனைகள் தீரவும் அம்மா இந்த இருமுடியின் மூலம் வழிவகுத்துக் கொடுக்கின்றாள். ஆன்மிக கண்ணோட்டத்துடன் பார்த்தால் இது புரியும்.

## அன்னையின் திருவுள்ளம்

இந்த மண்ணை மிதிக்கின்ற ஒவ்வொருவருக்கும் பலனை கொடுத்துதான் இருக்கின்றாள். அதன் மூலம் ஆன்மிக பலனை கொடுத்துதான் இருக்கின்றாள். அதன் மூலம் ஆன்மிக ருசி, தெய்வ ருசி ஊட்டுகிறாள். அதனை வைத்துப் படிப்படியாக ஆன்மிக முன்னேற்றம் பெற வேண்டும் என்பதுவே அவள் திருவுள்ளம். எனவே அவரவர் துன்பம் தணிய அன்னை இருமுடி வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறாள்.

இருமுடியைத் தொடர்ந்து செலுத்த வேண்டும். தொண்டு செய்ய வேண்டும். அம்மாவே பிறவி எடுத்துவந்த இந்த அவதார காலத்திலேயே அவள் கண் முன்னாலேயே பாவங்களை அனுபவித்துக் கழிப்பது பெரிய வாய்ப்பு அல்லவா?

இப்படி ஒவ்வொருவருக்குப் பின்னாலும் ஓராயிரம் வினை முடிச்சுகள் பின்னிக் கிடக்கின்றன. கருணை உள்ளத்தால் அவற்றையெல்லாம் எல்லோருக்கும் சொல்லி விடுவதில்லை. யாரோ ஒரு சிலருக்கு மட்டுமே பழைய பிறவி இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறாள்.

எனவே நம் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் பின்னால் பலமான காரணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு, தன்னை வருத்திக் கொண்டு தொடர்ந்து இருமுடி செலுத்தி வந்தால் நம் துயரம் தீரும், ஊழ் வினை தணியும்.

நினைவூட்டுவது நமது கடமை, பற்றிக் கொண்டு பாவம் போக்குவதும், பலன் பெறுவதும் பக்தர்களின் கையில்தானே உள்ளது?

இருமுடி கட்டிச் செல்வோம்!

திருவடி பற்றிக் கொள்வோம்!

ஓம் சக்தி!

# Melbourne - Mandrams – Upcoming Events – January 2017

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 01.01.2017 | Sunday | மார்கழி | 19 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 06.01.2017 | Friday | மார்கழி | 24 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 08.01.2017 | Sunday | மார்கழி | 26 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 13.01.2017 | Friday | மார்கழி | 01 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 15.01.2017 | Sunday | தை | 03 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 20.01.2017 | Friday | தை | 08 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 22.01.2017 | Sunday | தை | 10 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 27.01.2017 | Friday | தை | 15 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 29.01.2017 | Sunday | தை | 19 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**12.01.2017 – வியாழன் - பௌர்ணமி, 27.01.2017 – வெள்ளி - அமாவாசை**

## Divine Miracles at Melmaruvathur

### One who wanted spiritual instruction:

Mother once told a man who wanted spiritual instruction, “Son! You keep going round and round like a trapped rat. You practice ‘Sthoolam’ (macrocosm) and ‘Sukkumam’ (microcosm) again and again. You desire to be taught Sri Vidya. Do you know the lines from Lalitha Sahasranamam –

‘Pancha Predasa Nasakayai
Pancha Brahma Swaroopayai’

Do you know that I am above all this? I am She who receives all the mantras chanted. There is no no need for you to seek advice. I shall instruct you when the time comes and I know what to do”. The man was already sixty three years old and he wondered how long he would have to wait. Mother could read the thoughts of people before Her. So she gave him a fitting reply, She said, “You need not go along the Soham method, I shall make you achieve what you expect to achieve through the Sopana(ladder) method in one day”.

Sopana method aims at gradual achievement but Mother promised to gave him instant enlightenment. She asked him to do service. She did not want new temples built but wished that the existing temples should be maintained well. Mother said, “My aim is to wipe out the sorrow of the poor! A town is about to develop around this temple. A hospital, a wedding hall, an industrial establishment, and an orphanage are going to develop around this temple”.
She told a devotee on 28.07.1978 that money would flow for the construction activities and requested him to stay back and help in the activities.
***

# Sydney - Mandrams - Upcoming Events – January 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**


**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)

Bridge Road, Homebush 2140



| | | | |
|---|---|---|---|
| 06.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2017 | THURSDAY– செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 13.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## "வேள்விப்பூசை, வழிபாடு"

### அன்னையின் அருள்வாக்கு

### ஆன்மிக மாநாடுகளும் - வேள்விகளும்தான் பரிகாரம்

"இன்று உலகமே கொந்தளிப்பாக இருக்கிறது. இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி உலகம் அமைதிபெற வேண்டுமானால் கலச விளக்கு வேள்விப் பூசைகளும், ஆன்மிக மாநாடுகளும் தேவை.

உலகம் அமைதி பெற ஆன்மிக மாநாடு நடத்த வேண்டும் என்று தாயிடம் நீங்கள்தான் வேண்டிக்கொள்ள வேண்டும் .

ஆன்மிக மாநாடுகளும், கலச விளக்கு வேள்விப் பூசைகளும் உங்கட்காகவே தவிர எனக்காகவோ, அடிகளாருக்காகவோ அல்ல!

எந்த அரசும், எல்லோருக்கும் சேர்த்து, எந்த நன்மையையும், பாதுகாப்பையும் அளித்துவிட முடியாது. உனக்கு நீதான் பாதுகாப்பு!"

### சாந்தி வேள்வி

"உலகில் திடீர் மரணத்தினால் 400பேர், 500பேர் என இறக்கும்போது மரணமடைந்த ஆன்மாக்கள் அமைதியடையாமல் பேயாக அலையும். இவற்றை ஆன்மிகத்தால்தான் சாந்தி செய்ய வேண்டும். அக்கிரமங்களினால் சாந்தி செய்ய முடியாது".

### வேள்வி

"உங்கள் வேதனைகளைத் தீர்க்கத்தான் வேள்வி!"

### குடும்பத்துடன் வேள்வியில் கலந்துகொள்

"தாய் ஆரோக்கியமாக இருந்தால்தான் சேய் ஆரோக்கியமாக இருக்கும். ஆதலால் வேள்விப் பூசைகள் நடக்கும்பொழுது குடும்பத்துடன் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டும்".

### பௌர்ணமியில் குருபூசை


"பௌர்ணமி தினத்தில் குருவிற்குப் பாதபூசை செய்து, தான் செய்த பாவச் செயல்களுக்கு மன்னிப்புக் கேட்பது நல்லது".

### "சக்கரங்கள்" – பற்றி

"கோடுகள் கோணங்களாகும்
கோணங்கள் கோலங்களாகும்
கோலங்கள் கோணலானால்
கோளங்கள் கோணலாகும்".

ಆಆಆ

### ஆன்மிககுரு
### அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



**ஊசியும் - காந்தமும்**

“ஊசி! காந்தம்! – காந்தம் ஊசியை இழுக்கிறது. அந்தக் காந்த சக்தி ஏறிய ஊசி மற்ற ஊசிகளையும் இழுக்கும். துரு ஏறிய ஊசியில் காந்த சக்தி ஏறாது.
நீங்கள் துரு ஏறிய ஊசியாக இல்லாமல் தொண்டு செய்தால் உங்களை ஒட்டிப் பலரை ஆன்மிகத்துக்கு இழுக்கலாம்”.

**தெய்வத்துக்குச் செலவு செய்து கெட்டவன் இல்லை**

“தெய்வத்துக்குச் செலவு செய்து யாரும் கடனாளியாவது இல்லை. மனிதர்க்குக் கடன் கொடுத்தவன் தான் இன்றைய பிச்சைக்காரன்!

தெய்வத்துக்குச் செலவு செய்து கெட்டவன் இல்லை. மனிதர்க்குச் செலவு செய்து வாழ்ந்து கெட்டவர் உண்டு!

**பெண்களும் - நகை மோகமும்**

“பெண்கள் நகைக்காக அதிகம் செலவு செய்கிறார்கள். நகையால் ஆபத்துக்கள் தான் மிஞ்சும்.”

**ஐந்து விரல்! ஐந்து புலன்!**

“ஐந்து விரல்! ஐந்து புலன்கள்! இவை இரண்டும் சேர்ந்தால் எதையும் சாதிக்க முடியும். கல்லையும் கரைக்க முடியும்.”

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**மார்கழி – அமாவாசை–பௌர்ணமி :** ஆரோக்கிய வாழ்வு உண்டாகும்.
எவ்விதத்திலும் பாதிக்கப்படாத நிலையும், நல்ல ஆரோக்கியமும் உண்டாகும்.

**தை - அமாவாசை–பௌர்ணமி:** வாழ்க்கையில் வெற்றி உண்டாகும்.
வாழ்க்கையில் எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும்.


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2,600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3,500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## சந்நியாசியாக விரும்பியவர்

### எம்.ஜி.ஆர். ரசிகர்

தொண்டர் ஒருவர், அம்மாவிடம் வந்த தொண்டர்களில் அவரது வாழ்க்கை அனுபவம் சுவையானது, வித்தியாசமானது. இளமையில் அவர் கடவுள் மறுப்பு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். பின்னர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஈடுபாடு ஏற்பட்டு அவரது கட்சித் தொண்டராக இருந்தார். எம்.ஜி.ஆர். சொன்னார் என்பதற்காக கையில் கட்சிக் கொடிச் சின்னத்தைப் பச்சை குத்திக்கொண்டவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் மாலை நேரங்களில் கட்சிப் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

### திருவருள் ஈர்த்தது

அரசியலை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த அவரைத் திருவருள் ஆன்மிகத்தின் பக்கம் ஈர்த்தது. ஆம்! ஒருநாள் அறையில் படுத்துக்கொண்டிருந்த அவர் அறைக் கதவைத்தட்டி, மொட்டைத் தலையோடு ஒரு சிறுவனாக வந்த முருகன், “நீ திருச்செந்தூருக்கு வாடா!” என்று சொல்லிவிட்டு மறைந்து போனான்.

### வாழ்க்கை நாடகம்! பாத்திரம்!

உலக நாடகத்தில் உனக்குத் தரப்பட்ட பாத்திரம் அரசியல் அல்ல! ஆன்மிகம்! என்பதைத் திருச்செந்தூர் முருகன் உணர்த்திவிட்டான். அந்த அனுபவம் அவர் வாழ்க்கைப் போக்கையே மாற்றிவிட்டது. அதன் பின்னர் ஆன்மிகம் தொடர்பான நூல்களைக் கற்றார். சுவாமி விவேகானந்தர் நூல்கள் அவரை மிகவும் கவர்ந்தன. அவற்றுள் “ராஜயோகம்” அவரை மிகவும் கவர்ந்தது. விட்டகுறை! தொட்ட குறை! குண்டலினி யோகம் அவருக்குப் பிடித்துப் போயிற்று. அந்த யோகம் பழக விரும்பினார். அதற்குத் தகுந்த குருமார்கள் வேண்டுமே..! யாரிடம் சென்று பயிற்சி பெறுவது..? யோசித்தபோது.. வள்ளல் பரஞ்சோதி பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் போனார்.

### வள்ளல் பரஞ்சோதி

அவரிடம் சில தியானப் பயிற்சிகளைக் கற்றுக்கொண்டார். அவருக்கு உருவ வழிபாடு பிடிக்கவில்லை. அத்வைத அனுபவம் பற்றிக் கேள்விப்பட்டு அந்த அனுபவத்தைப் பெற வேண்டும் என்ற துடிப்பும் தவிப்பும் எழுந்தன. அந்த அனுபவத்தைப் பெற வேண்டுமானால் திருமண வாழ்க்கை ஒரு தடை. எனவே, கடைசிவரை பிரமச்சரியாகவே வாழ்ந்துவிடுவதெனக் கருதி ஆன்மிக சாதனங்களில் ஈடுபட்டார்.

### தீட்சை பெற்றது

வள்ளல் பரஞ்சோதி அவர் ஆன்மசாதனங்களில் தீவர முயற்சியோடு ஈடுபட்டு வருவதைக் கண்டு மகிழ்ந்து தீட்சை கொடுத்து, தியானப் பயிற்சியில் சில உளவுகளையும், நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுத்தார். இரண்டு படிகள் அடைவதற்கான தகுதியை ஆன்ம சாதனங்கள் பழகி அடைந்தாராம். அடுத்து மூன்றாம் படி என்கிற ஒரு நிலை உண்டு. குண்டலினி சக்தியை உச்சந்தலையான சகஸ்ர தளத்தில் கொண்டு வந்து நிறுத்துகிற பயிற்சி அது. அந்த மூன்றாம் படியை எட்டுவதற்கும் தீட்சை பெற வேண்டுமாம். எனக்கு அந்தத் தீட்சையும் தயவு செய்து வழங்க வேண்டும் என்று வள்ளல் பரஞ்சோதியை வேண்டினாராம்.

“தம்பி உன்னால் அதைத் தாங்க முடியாது! பெரிதும் அவஸ்தைப்படுவாய்! நீ கல்யாணம் செய்துகொண்டால் சமாளிக்கலாம். இல்லையேல் உன் சாதனங்களில் தொல்லைகள் வந்துவிடும்” என்று எச்சரித்தார். “கல்யாணம் செய்துகொள்! என்ற பேச்சை மட்டும் தயவு செய்து விட்டுவிடுங்கள்! எனக்கு அதில் ஆர்வமோ நாட்டமோ இல்லை! என் குறிக்கோள் இது! அதை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதுவே எனது இலட்சியம்! இதுவரை சுவாமி விவேகானந்தரை இலட்சிய புருஷராகக் கொண்டு இந்த இலட்சியத்தை அடைய விரும்பி அலைந்து வந்தேன். அதிர்ஷ்டவசமாகப் பெற வேண்டும் என்பதே என் ஆசை. வெறும் புத்தக அறிவில் எனக்கு நாட்டமில்லை” என்றார்.

“நன்றாக யோசித்துக்கொண்டு வா! நீ அதனால் அவஸ்தைப்படுவாய் என்று தெரிந்தும் உனக்கு எப்படி தீட்சை கொடுப்பேன்” என்றார் பரஞ்சோதி.

அவர் தீவிர நாட்டத்தை உணர்ந்து தீட்சை கொடுத்தார். அவர் சொல்லியபடி ஆன்ம சாதனம் பழகி வந்தார்.

### குண்டலினி யோகம் பழகியது

உடம்பில் உபாதைகள் பொறுக்க முடியாத அளவு ஏற்பட்டன.

உடல் உபாதைகள் என்றால் என்ன…? எப்படிப்பட்ட அவஸ்தைகள் வந்தன..? என்று அவர் நண்பர் கேட்டார். உடம்பில் ஏற்படும் உஷ்ணம் தகித்தது. தாங்க முடியவில்லை. தலைக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டால் அந்தத் தண்ணீரே கொதிக்கிற நீர் போல் உஷ்ணம் அடைந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! என்றார்.

உச்சந்தலையில் உஷ்ணக்கொதிப்பு ஏற்பட்டது. அதைத் தணிப்பதற்கு முடியவில்லை. குரு பரஞ்சோதி எச்சரித்தும், வற்புறுத்தி தீட்சை வாங்கியது எவ்வளவு பெரிய தவறு? என்று புரிந்தது. சரி! அவரிடமே போவோம் என்று எண்ணிக்கொண்டு அவரிடம் போனார். இவர் போன சில நாட்களுக்கு முன்பே வள்ளல் பரஞ்சோதி சமாதி அடைந்துவிட்டார். இனி என்ன செய்வது?

யோகம் பழகி – யோகப் பயிற்சியில் தேர்ந்த தகுதி வாய்ந்த குருமார்கள் யாரேனும் உண்டா? எனத் தேடித் தேடி அலைந்தார். அங்கங்கே தியானப் பயிற்சி மையங்களை அமைத்துச் சிலர் தியானம் கற்றுத் தருகிறார்களே… அத்தகைய சிலரிடம் சென்றார். அவரது உணர்வு நிலைகளை அவர்களால் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. அவருக்குத் தீர்வு சொல்லி சொல்லி வழிப்படுத்தவும் தெரியவில்லை. மனம் சோர்ந்து போனார்.

(8ஆம் பக்க தொடர்ச்சி)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

## மருவத்தூர் வந்தது

இந்நிலையில்தான் மருவத்தூரைப் பற்றிக் கேள்விப்பட்டு புறப்பட்டு வந்தார். முதன்முதல் மருவத்தூர் வந்து அந்த நாலுகால் மண்டபத்தின் படியில் நின்று அம்மாவைப் பார்த்தபோது இத்தனை நாளாக வாட்டி வதைத்த அந்த உஷ்ணம்! அந்தக் கொதிப்பு! அந்த அவஸ்தை மாயமாய் மறைந்தது! அப்படியே மெய்சிலிர்த்துப்போனார். இங்கே மகாசக்தி இருக்கிறது என்பதை உள்ளுக்குள் உணர்ந்துகொண்டார். அடிக்கடி வர ஆரம்பித்தார். அங்கே வரும் பக்தர்களின் அனுபவங்கள், அம்மாவின் அருள்வாக்கு பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

தானும் அருள்வாக்கு கேட்க ஆசைப்பட்டார். “நீ திருமணம் செய்துகொள்!” என்று அம்மா அருள்வாக்கில் சொல்லிவிடுவாளோ..? அப்புறம் அதை எப்படி மீறுவது? நமது உன்னத இலட்சியம் என்னாவது? என்று எண்ணிக்கொண்டு அருள்வாக்கு கேட்கவேண்டும் என்ற ஆவலை அடக்கிக் கொண்டார். அடிக்கடி மருவத்தூர் வருவதும், தியானம் செய்வதும், அந்த மண்ணில் தொண்டு செய்வதுமாக நாட்களைக் கடத்தி வந்தார்.

தன் தீவிர நாட்டத்திற்கு ஏற்றபடி அம்மா நமக்கு உதவமாட்டேன் என்கிறாளோ என்ற கவலை ஒருபுறம் அரித்தது. இந்நிலையில்..

## இலங்கைக் கலவரம் வெடித்தது

இலங்கையில் ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. சிங்களர்கள் தமிழர்களை வெட்டுவதும், தமிழ்ப்பெண்களைக் கற்பழிப்பதும், குழந்தைகளை ஈவிரக்கமின்றிக் கொல்வதும், மனித உடல்களை வெட்டிச் சாய்ப்பதும், பத்திரிகைகளின் வாயிலாகக் கேள்விப்பட்டு மனம் துடித்தார். அவர்களுக்கு எந்த வகையிலாவது உதவி புரியலாமே..! ஒரு செஞ்சிலுவைத் தொண்டன்போல உதவலாமே. இதுவரை வாழ்க்கையில் என்னதான் சாதித்தோம்? என்ற எண்ணங்கள் வந்தன.

இலங்கைக்கு எப்படிப்போவது? 30 மைல்தானாமே..? தன்னந்தனியாக நீந்திப் போனால் என்ன? என்று அசட்டுத் துணிச்சல் விவேகமில்லாத வைராக்கியம் வந்தது. ஓர் இரவு நேரத்தில் நீந்தியபடியே இலங்கை சென்றார்.

## மரணத்தின் விளிம்பில்

பாதி வழியில் உடல் சோர்ந்துவிட்டது. மீதி தூரத்தை எப்படி நீந்தி கடக்கப்போகிறோம்? என்ற பயம் வந்துவிட்டது. தண்ணீரில் மூழ்குவதும், மேலே வருவதுமாக இருந்தார். வாந்தி வந்தது. மீண்டும் உப்புத் தண்ணீர் வாய்க்குள் போனது.

மரணத்தின் விளிம்பிற்கு வந்துவிட்டோம் என்ற உண்மை புரிந்துவிட்டது.
அப்போதுதான் அம்மாவைப் பற்றிய நினைப்பு வந்தது. அம்மா! ஏதோவொரு அசட்டுத் துணிச்சலில் வந்துவிட்டேன். நான் சாவதற்குக்கூடப் பயப்படவில்லை. வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியவில்லையே..! என்றுதான் கஷ்டப்படுகிறேன். யாருமே இல்லாத அனாதையாக இந்தக் கடலில் சாகிறேனே.. என்றெண்ணி மறுகினார்.

அப்போது அவர் கையில் அம்மாவின் உருவம் பொறித்த செப்புக்காப்பு ஒன்றைக் கட்டிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்தும் எப்படி அந்தத் தெம்பு வந்ததோ..? பலநாள் யோகம் பழகியதால் தண்ணீரில் மிதக்கலாம் என்று கருதி அரை மணி நேரம் உடலைக் கிடத்தியபடி மிதந்தபடியே இருந்தார்.

அப்போது அந்த வழியாகப் படகில் வந்த தமிழக மீனவர்கள் யாரோ ஒருவர் மிதப்பதைப் பார்த்து விரைந்து படகைச் செலுத்தியபடி அருகே வந்தனர். கைகொடுத்துத் தம் படகில் அவரை ஏற்றிக்கொண்டு வந்து கரை சேர்ந்தனர். அவரைக் கண்டபடி திட்டி “படித்த நீ இப்படி ஒரு முட்டாள்தனமாக காரியத்தில் இறங்கலாமா?”என்று கண்டித்து நீ ஒருவனாகப் போய் இலங்கைத் தமிழர்களுக்கு எந்த வகையில் உதவி செய்துவிட முடியும்?”என்று கூறி இனி இப்படி அசட்டுத் துணிச்சலில் இறங்கிவிடாதே எனப் புத்தி சொல்லி அனுப்பி வைத்தனர்.

## அம்மா அருள்வாக்கு

அதன்பிறகு அன்னையிடம் வந்தார். அருள்வாக்கு கேட்டார்.
“எப்படிப்பட்ட முட்டாள்தனமாக காரியத்தில் இறங்கினாய் மகனே! பைத்தியக்காரா! இலங்கைக் கொந்தளிப்பு அடங்க வேண்டும் என்று தியானம் செய்திருந்தால்கூட அதனால் ஓரளவு பலன் கிடைத்திருக்குமே.. இறந்த ஆன்மாக்கள் சாந்தியடைய தியானம் இருந்திருக்கலாமே... அதை விட்டுவிட்டுத் தன்னந்தனியாகப் பைத்தியக்காரத்தனமாகப் போனாயே.. மகனே!”என்று அம்மா அவரைக் கடிந்துகொண்டாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் ஒரு நாளைக் குறிப்பிட்டு, அத்தனை வார வழிபாட்டு மன்றங்களிலும், இலங்கைத் தீவில் கலவரம் தணிய வேண்டும் என்பதற்காகவும், அனைவரையும் தியானம் இருக்கச் சொன்னாள் அன்னை. அவ்வாறே தியானம் மேற்கொள்ளப்பட்டது.

“மகனே! நீ விரும்புகிறபடி எல்லாம் தருவேன். இங்கே தொண்டு செய்! ஆனால் ஒன்று! நீ என்னசெய்தாலும் செருப்படியும், அவச்சொல்லும்தான் பரிசாகக் கிடைக்கும். தளரக்கூடாது. அவைதான் உன் ஆன்ம வளர்ச்சிக்குத் துணை செய்யும்” என்று சொல்லி அனுப்பினாள் அன்னை.

அதன் பிறகு அன்னையிடமே தஞ்சமடைந்தார். தியானத்திலும், அம்மாவின் தொண்டுகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவருக்குப் பல இறை அனுபவங்களை வழங்கி வந்தாள் அன்னை. ஆயினும் இவர் எதிர்பார்ப்பு உடனே நிறைவேறவில்லை.

## இருவரும் கைவிட்டு விட்டார்களே..

ஒரு கட்டத்தில் அம்மாவும் அடிகளாரும் நம்மைக் கைவிட்டு விட்டார்களே...! என்ற கவலையில், இருவரையும் நொந்துகொண்டு சந்நியாசி ஆகிவிடத் தீர்மானித்தார்.

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

அவரது மனப்போராட்டத்தையும், அவர் உணர்வுகளையும் அவர் வாயாலேயே கேட்போம்.

“சரி! அம்மாவின் தொண்டன் என்று கூறிக்கொள்ளும் தகுதி எனக்கு இல்லை என்றாகிவிட்டது. இனி நமக்கு எதற்கு மன்றத்தலைவர் பதவி? என்று கருதிப் பதவி விலகினேன்”. முறைப்படி வேறொரு தலைவரைத் தேர்ந்தெடுக்கச் செய்தாயிற்று.

“இனி நமக்கெதற்கு உலக வாழ்க்கை..? தொழில்.. சுகம்…? என்றெண்ணி அத்தனையும் விட்டுவிட முடிவு செய்தேன்.

அப்பொழுது அன்னையின் ஆலயத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. நீங்கள் அபிடேகத்திற்கு ஏற்கனவே கட்டணம் செலுத்தியுள்ளீர்கள். அடுத்தவாரம் வியாழக்கிமை உங்கள் அபிடேக முறை வரவிருக்கிறது. வந்து கலந்துகொள்ளவும்”என்று கடிதத்தில் இருந்தது.

அபிடேகத்திற்குப் போகலாமா? வேண்டாமா? என மனம் ஊசலாடியது. இறுதியாக ஒரு முடிவிற்கு வந்தேன். அதாவது இங்கிருந்து நேரே மருவத்தூர் சென்று அபிடேகத்தில் கலந்துகொள்ள வேண்டியது. வியாழக்கிழமை அபிடேகம். ஆதலால் அன்று அருள்வாக்கு இருக்காது. நமக்கு அருள்வாக்கு வேண்டாம். அடிகளார் தரிசனமும் வேண்டாம். அடிகளார் முகத்தைப் பார்த்தால் நம் முடிவில் ஏதேனும் மாற்றம் நேரும்படிச் செய்தாலும் செய்துவிடுவார். மருவத்தூர் சென்று அபிடேகப் பிரசாதம் பெற்றுக்கொண்ட பிறகு மீண்டும் ஊர் திரும்பி வரக்கூடாது”.

### எதிர்காலத்திட்டம்

“எங்கேயாவது கண் காணாத இடத்திற்குச் சென்றுவிட வேண்டியது. மீதம் உள்ள நாட்களை ஆன்ம விசாரத்தில் கழிக்க வேண்டியது என்பது திட்டம்.

இது நன்கு யோசித்து எடுக்கப்பட்ட முடிவு என்பதால் முன்கூட்டியே உலக பந்தங்களிலிருந்தும், அலுவலில் இருந்தும் பிரச்சினையின்றி விடுவித்துக்கொண்டேன்.

இன்றுவரை நைட்டிக பிரம்மச்சரிய விரதம் கடைப்பிடித்து வருவதனால் இந்தியாவில் பல ஆசிரமங்களின் பரிச்சயமும், போனால் உடனே சேர்த்துக்கொள்ளும்படியான அனுமதியும் ஏற்கனவே கைவசம் தயாராக இருந்தன.

அடிகளாரின் ஆன்ம சக்தியை அனுபவம் மூலமாகவே உணர்ந்து வணங்கி வந்ததனால் எட்டு ஆண்டுகளாக ஆன்மிக நாட்டம் வேண்டி ஊரை விட்டு ஓடும் எண்ணம் மறைந்திருந்தது.

இன்று அடிகளார் அன்னை இருவருமே கைவிட்டுவிட்டார்களே என எண்ணியதால்தான் இந்த முடிவிற்குத் துணிந்தேன்.

மருவத்தூர் வந்தேன், அபிடேகத்தில் கலந்துகொண்டேன். இது கடைசி முறை என்று கருதியதால் அமைதியாகக்கண்டு அவளிடம் விடைபெற்றேன்.

அத்வைத மார்க்கத்தில் நம்பிக்கை வைத்திருந்த நான், இறுதியாக ஒரு குறிப்பிட்ட மடத்தில் சேர முயற்சிப்பதென முடிவெடுத்து அங்கே சென்றேன். அங்கே சேர்வதற்கு ஏற்கனவே ஒருமுறை முயன்றபோது, அவர்கள் “இங்கு புதிதாக யாரையும் சேர்ப்பதில்லை. ஆயினும் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து தங்கிவிட்டுச் செல்ல அனுமதிக்கிறோம்”என்று கூறியிருந்தார்கள். இந்த முறை சென்றபோது அதே பதிலையே கூறினார்கள்.

விதி யாரை விட்டது? நம் வினைதான் விடுமா? என்று யோசித்தபடி வந்தபோது, ஒரு பெரியவர் என்னிடம் வந்து “தம்பி! உங்களுடைய ஆன்மிகத் தாகம் எனக்குப் புரிகிறது! இங்குச் சமாதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மகானின் நேரடிச் சீடர்களில் ஒருவர் இன்னமும் இருக்கின்றார். தாங்கள் அவரிடத்தில் சென்றால் ஆவண செய்வார்”எனக் கூறினார்.

### ஒரு மகானின் சீடர்

“நானும் அவரைப் பார்க்கச் சென்றேன். எனக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. நான் அவரைப் பார்த்துக்கொண்டேயிருக்க, அவரும் என்னைப் பார்த்துக்கொண்டே இருக்க, இப்படி ஒரு அரை மணி நேரம் கழிந்தது.

பிறகு, அவராகவே “மகிழ்ச்சி! நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்..?” என்று ஆரம்பித்தார்.

நான் அதுவரை கடைப்பிடித்து வந்த யோகத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கவே, அந்த யோகம் அவருடைய குருபிரான் அவர்களுக்குப் பொருந்தியதால் பேச்சு நெடுநேரம் தொடர்ந்தது.

இறுதியாக அவர் “தம்பி! இங்கு இந்த மடத்தில் யாரையும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். ஆயினும் உங்களுக்காக நான் ஒன்று செய்ய முடியும். எங்களுடைய பகவான் அவர்கள் நினைத்தாலே முக்தி தரும் தலமான இத்திருத்தலத்தில் உள்ள மலையின் மேல் பல குகைகளில் தவம் செய்திருக்கிறார். அவர் பலகாலம் தங்கியிருந்த குகைகள் இரண்டு. அவற்றில் எது உங்களுக்குப் பிடிக்கிறதோ அதில் சென்று நீங்கள் மலை மேலேயே தங்கலாம். அங்குத் தங்கி உங்கள் தவத்தைத் தொடருங்கள்”.

### உணவுப் பிரச்சனை

“ஆன்மிக சாதகர்க்குப் பசி என்றை ஒன்றைத்தவிர்க்க இயலாது. எனவே, ஒருவேளை உணவாவது உங்களுக்குத் தேவைப்படும். மலையடிவாரம் வந்து ஏதாவது இடத்தில் கேட்டு உணவைப் பெறுவதில் ஒரு சிக்கல் இருக்கின்றது. உணவுக்காக மலையிறங்கி வரவேண்டும்.

(தொடர்ச்சி…10ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

யோக நெறியில் நிற்பவர்கள், ஞான நெறியில் முயல்பவர்கள் கண்ட கண்ட இடங்களில் உண்ணக்கூடாது. எவரிடம் போய் உண்கின்றோமோ, அவர்களின் எண்ணம் நம்மைப் பாதிக்கும். அவர்கள் நல்லவர்களாய் இருந்துவிட்டால் சரி! தூய்மை அற்றவர்களாய் இருந்தால் உங்கள் ஆன்மிக முயற்சிகளுக்கு இடையூறு வரும்!

முதல் 48 நாட்களுக்கு ஓர் அன்பரிடம் சொல்லி, உணவுக்கு நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன். உங்கள் உண்மையான தவ ஒழுக்கத்தைக் கண்டால் பிறகு மடத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் உங்கள் உணவிற்கு ஏற்பாடு செய்துவிடுவார்கள். நீங்கள் அஞ்ச வேண்டாம். நீங்கள் நாளைக் காலையிலேயே உங்களுக்குப் பிடித்தமான குகையில் தங்கிக் கொள்ளலாம். இப்பொழுது இரவாகிவிட்டது. இங்கேயே தங்கிக் கொள்ளுங்கள்''என்றார்.

## மீண்டும் மருவத்தூர் வந்தது

''அந்தப் பெரியவர் தம்முடைய குருநாதரைப் பற்றிப் பேசும் போதெல்லாம், எனக்கு நம் ஆன்மிக குரு அடிகளாரின் இனிய முகம் நினைவுக்கு வந்தது. மருவத்தூரை விட்டு வந்து நான்கு நாட்களாயின. நாளை செவ்வாய்க்கிழமை.

எனவே, இரவோடிரவாக மருவத்தூர் சென்று, அன்னையிடம் மானசிக ஆசி பெற்றுக்கொண்டு நமது குருநாதர் அடிகளாரின் அன்பு முகத்தை எட்ட நின்று தரிசனம் செய்துவிட்டு, நாளையே திரும்பி வந்து நமது தவ வாழ்க்கையைத் தொடங்குவோம் என்றெண்ணி அந்தப் பெரியவரிடமும் கூறி ஆசி பெற்று அதிகாலை மருவத்தூர் வந்தடைந்தேன்.

## எல்லாமே கடைசி அல்லவா?

நான் வந்தவேளை! அம்மா ஆனந்தம் பொங்கும் அலங்காரியாகக் கருவறையில் மின்னிக் கொண்டிருந்தாள். இது கடைசி முறையல்லவா? உலக பந்தங்களை விட்டு – எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுப் புதிய பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நாளை முதல் தவ வாழ்க்கையைத் தொடங்கப் போகிறேனல்லவா?

எனது வாசமெல்லாம் நாளை முதல் அந்த மலைக் குகையில் அல்லவா?

எனவே, எப்படி எப்படியோ அன்னையை வணங்கினேன். இந்த நேரத்தில் அடிகளாரும் வந்துவிட்டார்கள்.

நான் தொலைவில் நின்றபடி தரிசனம் செய்தேன். அடிகளார் உள்ளே சென்றதும் கோயில் தொண்டில் ஈடுபட ஆரம்பித்தேன். எல்லாமே கடைசி அல்லவா?

அடிகளாரின் அந்தப் புன்னகை

''சக்தி..நகருங்க..''என்ற ஒரு குரல் கேட்டவுடன் நிமிர்ந்தேன். அந்த நேரம் மின்னல் அலைகள் என் கண்களைத் தாக்கின. மின் அலைகளா அவை..? இல்லை..இல்லை..இன்ப அலைகள்..! அவை எங்கிருந்து புறப்பட்டன..? அது அடிகளாரின் கண்களல்லவா..?

ஆம்! அத்தனையும் ஒரு நொடிக்குள்..! இதய தெய்வம் அடிகளார் இமை திறந்து ஒரு மின்னல் பார்வையை வீசிவிட்டு ஒரு புன்னகையோடு சென்று விட்டார்கள்.

## அன்றைய அருள்வாக்கில் என் பெயர்

அன்று செவ்வாய்க்கிழமை அபிடேகதாரருக்கு அருள்வாக்கு. நான் வியாழக்கிழமை அபிடேகம் முடிந்து வெள்ளிக்கிழமையன்று இருந்திருந்தால் எனக்கும் அருள்வாக்கு கிடைத்திருக்கும். நான் வீம்பாகப் போய்விட்டேனல்லவா..?
ஆனால், என் அபிடேகம் நடந்த பிறகு அருள்வாக்கு இல்லாத காரணத்தால் ஆலயம் வந்த அன்று சற்றும் நான் எதிர்பாராத வகையில் அபிடேகதாரன் என்ற முறையில் என் பெயரையும் அழைத்துவிட்டார்கள்.

ஒரு வகையில் அதிர்ச்சி! மற்றொரு வகையில் மகிழ்ச்சி! அன்னை என்ன சொல்லப் போகிறாளோ.. என்று அதிர்ச்சி! அன்னையிடம் அருள்வாக்கு கிடைக்க இருப்பதால் மகிழ்ச்சி!

## அன்னை கூறியவை

அன்னையின் முன் அமர்ந்தேன். அன்னை ''சக்தி! என்னை நாடி வந்துள்ள உனக்குப் பதவி, பணம், புகழ், பக்தி, சாதனம், யோகம், ஆன்ம பனக்குவம் அத்தனையும் தருகிறேன். உனக்கு இன்னும் என்ன வேண்டும் கேள் மகனே!''என்றாள்.

எனக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நாம் அத்தனையும் உதறித் தள்ளிவிட்டு வேறொரு ஆசிரமத்தில் சேர்ந்துகொண்டு விடைபெற வந்தால், இவளோ கொஞ்சம்கூடக் கருணையே இல்லாத கல் நெஞ்சக்காரி போல எது எது எனக்கு வேண்டாமோ அத்தனையும் தருகிறேன் என்கிறாளே.. நம்மிடம் விளையாடுகிறாளா..?
அம்மாவுக்கும்கூட என் தாகம் புரியவில்லையே..! நம்மைப் பார்த்து அம்மா கிண்டல்தான் செய்கிறாளா? என்றெண்ணத் தோன்றியது.''

## போதுமம்மா இந்தப் பொய் வாழ்க்கை

''போதும் அம்மா இந்தப் பொய் வாழ்க்கை'' என்று நான் கூறியதுதான் தாமதம்.

அணுகுண்டு வெடித்தால் ஒருவேளை இப்படித்தான் இருக்குமோ?
அன்னையின் கருணை ஊற்றாக இருக்கும் கனிந்த கண்கள் இரத்தமாகச் சிவந்தன.

அன்னையின் கோபம் என்பார்களே! அது இப்படித்தான் இருக்குமோ..?
அன்னை படபடத்தாள். தன் வலக்கரத்தைத் தூக்கித் தன் மார்பைக் காட்டியவாறு பேசினாள்.
வந்தவைகள் வார்த்தைகளா..? அல்லது வெடிகுண்டுகளா..?

(தொடர்ச்சி…11ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

## நீயெல்லாம் பிச்சையெடுத்துத் திண்பதற்கா இந்த அவதாரம்?

“ஏண்டா! என் பிள்ளைகள் எல்லாம் பிச்சையெடுத்துத் திண்பதற்காகவா நான் ஆதிபராசக்தியாக அவதாரம் எடுத்து வந்திருக்கிறேன்?

“நீ தெருத்தெருவாக அலைவதற்காகவா பாலகன் அவதாரம் எடுத்து வந்ததிருக்கிறான்?”

“பிச்சையெடுத்து சந்நியாசி உண்ணலாமடா மகனே! ஆனால் அம்மாவிடம் வந்தவன் நினைக்கலாமா?”

## அது அந்தக்காலமடா

“டேய் மகனே! வாழ்க்கையை விட்டு ஓடிக் காடு, மலை, குகைக்குள்ளே வசித்துக்கொண்டு என்னைத் தேடியது அந்தக் காலமடா!

இங்கு நான் உங்களைத் தேடி வந்திருக்கிறேனடா..!
ஒன்று மட்டும் சொல்கிறேன் கேள்!
நீ பாலகனிடம் கற்றுக்கொள்ள முடியாததை வேறெங்கேயும் கற்றுக் கொள்ள முடியாது.

இங்கேயே நீ சோடை போனால் வேறெங்கேயும் தேறமாட்டாயடா!

போ! போ! நீ எங்கு வேண்டுமானாலும் போ! உனக்கு அங்கேயும் பாலகன் அருள்புரிவான். நானும் துணை நிற்பேன்” என்றாள் அன்னை.

பிறகு நான் யார்? என் நிலை என்ன? என் எதிர்காலம் என்ன என்பனவற்றை எல்லாம் எடுத்துக்கூறி “மகனே! தொழிலில் இருந்து கொண்டு நியாயமான பொருளைத் தேடு! அப்பொருளை ஆன்மிக முன்னேற்றத்திற்குச் செலவிடு! உன் வலிமையை நீ இதில் காட்டு! அந்தத் தவத்தைவிட இது கடினமானது! மேலானது!” என்றாள் அன்னை.

அன்னையின் முகத்திலிருந்து அந்த அழகான புன்னகை ஒன்றும், அவள் வாயிலிருந்து “மகனே! உத்தரவு!” என்ற சொல்லிரண்டும் வெளிவந்தன.

உடனே விழுந்து வணங்கி எழுந்து வந்தேன்.

அன்றைக்கும் இன்றைக்கும் எனக்கு ஏற்பட்டுள்ள மாற்றத்தை நினைக்கிறேன். பிரமிக்கத்தக்க அளவு பெரிதாகத்தான் உள்ளது” என்கிறார்.

“நாற்பதாயிரம் பேருக்கு நல்வாக்குச் சொல்லிவிட்டு ஆன்மிகத்திற்கென்று நாலுபேர் கூட இல்லையே என்று என் பாலகன் தவிக்கிற தவிப்பு யாருக்கடா தெரியும்? யாருக்கடா புரியும்? அவனை யாராவது புரிந்து கொண்டார்களா?” என்று இந்தத் தொண்டரிடம் தான் அம்மா அடிகளாரின் ஆதங்கத்தைத் தெரிவித்தாள்.

அம்மா அப்படி சொல்வதிலே காரணம் இருந்தது, இருக்கிறது.

அம்மாவிடம் வருபவர்கள் பெரும்பாலும் இந்த இயக்கத்தில் பேரும் புகழும், செல்வாக்கும் பெறத் துடிப்பவர்கள். அம்மாவின் பெயரை வைத்து தம் வியாபாரமும், தொழில் நிறுவனங்களும் பெருக வேண்டும் என்று விரும்புகிறவர்கள், தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு அம்மாவின் தயவு வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள், நம்மைத் தவிர அம்மாவிடம் யாரும் நெருங்கிவிடக் கூடாது என்று நினைப்பவர்கள், அம்மா யாரிடமாவது பாசமாகப் பேசினால் பொறாமையில் புழுங்குகிறவர்கள், எப்படியாவது அவர்களை வெறுப்பேற்றி ஓடவைப்பவர்கள் - இவர்கள் அம்மாவிடம் கொண்ட பக்தியைக் குறை சொல்ல முடியாது என்றாலும் அம்மாவின் எதிர்பார்ப்புக்குத் தக்கவாறு இவர்களால் நடந்துகொள்ள முடிவதில்லை. காரணம் உலக மாயை!

இந்த மாயைப் புரிந்துகொண்டு அதிலிருந்து விடுபட விரும்பி – அம்மா அருள்பெற விரும்பி – ஆன்ம நாட்டமும் அருள் தாகமும் கொண்டு வந்தவர் அந்தத் தொண்டர்.

ஆரம்பத்திலேயே அவருக்கு ஒரு பொறுப்புக் கொடுத்த அம்மா என்ன சொன்னாள் தெரியுமா?

“மகனே! இங்கே உனக்குச் செருப்படி கிடைக்கும்! அவச்சொல் கிடைக்கும். அனைத்தையும் துடைத்துப்போட்டு விட்டு என் பின்னால் வரவேண்டும்” என்று எச்சரித்தாள். அதுமட்டுமா? “நான்” என்ற அகங்காரம் அழிவதற்காக அவருக்கு வைத்த சோதனைகள் ஒன்றா? இரண்டா?

வேறு யாராக இருந்தாலும் அம்மாவின் மேலும் அடிகளரின் மேலும் நம்பிக்கை இழந்து ஓடிப்போய் இருப்பார்கள். இன்றேல் தற்கொலை செய்து கொண்டு முடிந்துபோய் இருப்பார்கள்.

இவர் இலட்சியம் பெரிது. அத்வைத அனுபவம் என்பது சும்மாவா? நிர்விகல்ப சமாதியில் கிடைக்கிற அனுபவம் அது! இராமகிருஷ்ணரின் குரு தோத்தாபுரி 40 வருடங்கள் அதனை அடையத் தவம் தவம் செய்தவர். இராமகிருஷ்ணர் கடுமையான பயிற்சிகளெல்லாம் செய்து அந்த அனுபவத்திற்குத் தகுதி பெற்றார்.

தங்கள் மன்ற இடப் பிரச்சினை தொடர்பாக பொலிஸ், வழக்கு, நீதிமன்றம் என அவர் அலையவேண்டி இருந்தது. பொலிஸ் அதிகாரிகளால் அவமானப்படுத்தப்பட்டார். எந்த செவ்வாடைத்தொண்டரும் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – January 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 06.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2017 | THURSDAY– செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 13.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

பாவம்! எத்தனை விதமான சோதனைகள்!
மேல்மருவத்தூரில் ஒரு பூசல் நடந்தது. அவரையும் அதற்குப் பொறுப்பாளியாகச் சித்தரித்து அவருக்கு அவப்பெயர் உண்டாக்கி, அவரை அடிகளாரிடமிருந்து பிரிப்பதற்குச் செவ்வாடைத் தொண்டர்களே சூழ்ச்சி செய்தனர்.

இவ்வளவு அவமானங்களுக்கும் பழிச்சொற்களுக்குப் பிறகும் இந்த அம்மா மேல் எப்படி உங்களால் நம்பிக்கை இழக்காமல் இருக்க முடிகிறது? என்று ஒருவர் அவரைக் கேட்டார்.

“ஒவ்வொரு சோதனைக்கும் பின்னாலே ஓர் உயரிய ஆன்மிக அனுபவம் கிடைக்கிறதே.. அதுதான் சூப்பர்!” அதையெல்லாம் வெளிப்படுத்த முடியாது என்பார் அவர்.

உச்சக்கட்டமான சோதனை ஒன்று அவருக்கு வந்தது.
அம்மாவே அவரைத் தூக்கி எறிவது போல ஒரு நாடகம் ஆடினாள்.

அவரைச் சுற்றியிருந்த நண்பர்கள் அவரைக் கைநெகிழ விட்டுவிட்டார்கள்.

“அம்மா இவரை ஒதுக்கிருச்சி!” என்று சிலபேர் உள்ளுக்குள் மகிழ்ந்தார்கள்.

அவரது மூலபலம் என்றிருந்த ஒவ்வொன்றையும் அடித்து நொறுக்கி வந்தாள் அன்னை. அவரது ஒவ்வொரு சிறகையும் வெட்டி வந்தாள். கடைசியில் அவருக்கென்று இருந்த தொழிலில் கை வைத்தாள்.

இந்த அவதாரக் காலத்தில் அம்மா தன் பக்தனையோ, தொண்டனையோ சாப்பாட்டுக்குக் கஷ்டம் என்று எவரையும் வைத்ததில்லை. எவனையும் பசியில் துடிக்க வைத்ததில்லை. சோற்றுக்கு வழி வைத்துக் கொடுத்துவிட்டே சோதனை செய்வாள், அடிப்பாள்.

அந்தத் தொண்டர் விஷயத்தில் மட்டுந்தான் அவள் அதிக சோதனை வைத்தாள். பிழைப்பிலேயே கை வைத்தாள்.

அம்மா அவருக்கு வைத்த சோதனைகளைக் கண்டு தெய்வங்களே கூடப் பரிதாபப்பட்டன போலும்!

ஒருநாள் அவர் தியானத்தில் விநாயகர் தோன்றி “மிகவும் சிரமப்படுகிறாயேடா மகனே! இந்த மந்திரத்தைச் சொல்லிவாடா! வருமானம் கிடைக்கும்” என்று சொல்லி ஒரு மந்திரம் சொல்லிவிட்டு மறைந்து போனாராம். ஆனாலும் அவர் அந்த ஆணையை ஏற்கவில்லை. தடம் மாறவில்லை.

அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க வந்தார். “உன் பக்தி குறைந்துவிட்டதடா” என்றாளாம் அன்னை.

ஏன் இப்படிச் சொல்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு தன் வயிற்றைத் தடவிக்காட்டி “அம்மா..! நீ இங்கேயே அடித்தாயே..! அப்படி அடித்தபோதும் நான் வேறெங்கும் சென்று கையேந்தவில்லையே.. அம்மா?” என்றாராம்.

“அந்த மந்திரத்தை மனத்தில் வாங்கிக் கொண்டாயல்லவா?” என்று திருப்பிக் கேட்டாளாம் அன்னை.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – January 2017

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 01.01.2017 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 15.01.2017 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

"இப்படியெல்லாம் உங்களைப் போட்டு வறுத்தெடுக்கிறாளே.. அம்மாவிடம் சலிப்போ, வெறுப்போ வரவில்லையா சார்?" என்றொருவர் கேட்டார்.

"கசப்பான ஒவ்வொரு சோதனைக்குப் பிறகும், நமக்குப் பாடமும், படிப்பினையும், அனுபவமும் கிடைக்கிறதே சார்! நம் ஆன்ம வளர்ச்சிக்கு இவையெல்லாம் தேவையாய் இருக்கே சார்!" என்றார் அவர்.
மேலும் சொன்னார்.

**"ஆரம்பத்தில் அம்மா நமக்கு அல்வா கொடுத்தும், சாக்லெட் கொடுத்தும் நம்மையெல்லாம் இழுத்தது. இது ஆரம்பக் கட்டம்.**

**அடுத்து, தன்னிடம் ஒதுங்கிய ஆன்மாக்களின் பழைய ஊழ்வினைகளைக் கரைக்க வேண்டிய கட்டம். அம்மா அதுதான் செய்கிறது. தாக்குப் பிடிக்க முடியாமல் அவனவனும் ஓடிப்போய்விடுகிறான்.**

**அப்படி ஓடிப்போகிறவனுக்கும் ஒரு சந்தர்ப்பம் தந்தே அம்மா மீண்டும் சில உண்மைகளைப் புரிய வைத்து இழுத்துக் கொள்கிறாள். அதற்கும் மசியாதவனை அவன் போக்கிலேயே விட்டுவிடுகிறாள். இதுதான் இப்போது நடந்து வருகிறது" என்றார்.**

"இந்தக் கீதையைக் கண்ணன் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் ஏன் உபதேசித்தான்? இந்தச் சந்தேகம் ரொம்ப நாளாகவே இருந்துச்சு சார்! இப்போதுதான் சார் விளங்கிற்று. இதெல்லாம் விவரமாகச் சொல்லக் கூடாது சார்!

உடம்பிற்கும் மனத்திற்கும் சோதனை வருகிறது. வயிற்றில் அடிக்கிறாள் என்று தெரிகிறது! அதன்பிறகே உள்ளத்தில் இன்பரசம் சொட்டுகிறது! இந்தச் சோதனைகளுக்குப் பிறகு வருகிற அனுபவம் இது!" என்றார் அவர்.

அம்மா பரம்பொருள் சார்! எனவே, அது என்ன சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் அதைக் கேட்டுக்கொண்டு நிற்க வேண்டும். அதுபற்றிய உடன்பாட்டுச் சிந்தனையோ எதிர்மறைச் சிந்தனையோ எழலாகாது. கேட்பவன் எண்ண ஓட்டத்தை அம்மா ஆழ்ந்து பார்க்கும்" என்றார் அவர்

### அருள்வாக்கில் இருவகை

அம்மா சொல்லி வருகிற அருள்வாக்குகள், கருத்துக்கள் இரண்டு வகை.

சராசரி மக்கள், பாமர மக்கள் என இவர்களுக்கு உலகியல் ரீதியாகச் சொல்லப்படுவன. இது ஒரு வகை.

"பக்குவம் உள்ளவர்களுக்குச் சொல்லப்படுவன என்று சில உண்டு" என்றார்.

அது ஏன்? என்ற கேள்விக்கு அவர் பைபிளிலிருந்தே மேற்கோள் காட்டினார்.

யேசு பெருமான் உலக மக்களுக்குத் தேவையானவற்றைச் சொன்னார். அணுக்கமான சீடர்க்கு மட்டுமே சிலவற்றைச் சொல்லி "முத்துக்களைப் பன்றிகளுக்கு இரையாக்காதீர்கள்" என்று சொல்லி எச்சரித்தார்.

எனவே, பக்குவமான பக்தர்களுக்குச் சில நுட்பமான விஷயங்களை அம்மா சொல்வதுண்டு.

அம்மாவின் அவதார காலத்தே இப்படியும் ஓர் ஆன்மா இருந்தது என்பதற்காக இவை எழுதப்பட்டன.
ஓம் சக்தி!

## Melbourne - Mandrams – Upcoming Events – January 2017



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 06.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.01.2017 | THURSDAY– செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 13.01.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.01.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 08.01.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.01.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

உலகப்பற்றில்லாமல் வாழ்ந்தால்தான் ஒருவன் வாழ்க்கையில் ஆன்மிக முன்னேற்றத்தை அடைய முடியும் என்று சிலர் கூறுகிறார்களே! இது சரியா அம்மா?

பற்று இல்லாமல் உலகில் யாரும் வாழ முடியாது. அம்மாவும் பற்றை விட்டுவிட வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள்.

வாழ்க்கையில் தாய், தந்தை, கணவன், குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று நாளாக, நாளாக பற்றுகள் அதிகரித்துக்கொண்டுதானே வருகிறது? நம்மைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல் குடும்பத்தில் உள்ளவர்களைப் பற்றித்தானே அதிகம் கவலைப்படுகிறோம்? போதும் என்ற மன நிறைவோடு படிப்படியாக உலகப் பற்றை விட முயற்சிக்க வேண்டும்.
பற்றை விட்டால்தான் ஆன்மிகத்தில் முன்னேற முடியும் என்பது உண்மைதான். முடியவில்லையே! என்ன செய்வது?

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின்

# இருமுடி மகிமை

- அன்னையின் அருள்வாக்கு

## இருமுடி பொருளும்-விளக்கமும்

“இருமுடி என்பதற்கு இருள்முடி என்று பொருள். இதயத்தில் உள்ள இருளைப் போக்க அணியும் முடி என்று பொருள். கணவன், மனைவி இருவரின் அகத்தோற்றத்தையும் முடிபோடுவது என்று பொருள். மற்றும் மனிதனின் அகமும் புறமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையும் இருமுடி குறிக்கும்”.

## ஏவல், பில்லி, சூனியங்கள் தாக்காது

“இந்த மண்ணில் 108 முறை அமர்ந்து தியானம் செய்பவர்களையும், இங்கே ஒன்பது முறை இருமுடி செலுத்தியவர்களையும் ஏவல், பில்லி சூனியங்கள் தாக்காது.”

## உன் அழுக்கு - குடும்பத்தின் அழுக்கு

“இருமுடி செலுத்துவது உன்னுடைய அழுக்குகளை நீக்கிக் கொள்ளவே! உன் உள்ளத்தில் உள்ள அழுக்கு, குடும்பத்தில் உள்ள அழுக்கு. இவ்விரண்டு அழுக்குகளையும் நீக்கிக் கொள்ளவே இந்த இருமுடி! ஒழுக்கம், கட்டுப்பாடு இன்றி செலுத்தும் இருமுடியால் பயனில்லை.”

## காட்சி கொடுப்பேன்

“இருமுடி ஏந்திக்கொண்டு வருகிற சிலர்க்குக் காட்சி கொடுப்பேன். அந்தக்காட்சி பெற்றவர்க்கு மறுபிறவி இல்லை.”

## எதற்காக இருமுடி

“இருமுடி செலுத்துவது எனக்காக அல்ல! உனக்காக! இருமை முடி! இருமுடி! ஒரு முடி உன் உள்ளத்து அழுக்குகளைப் போக்கிக் கொள்ள! இன்னொரு முடி உன் குடும்பத்தின் அழுக்குகளைப் போக்கிக் கொள்ள! ஒன்று உன் பாவம் குறைவதற்கு! மற்றொன்று உன் குடும்பத்தின் பாவம் குறைவதற்கு! அதற்காகவே இருமுடி!”

## ஆன்ம பலம் பெற!

ஆன்ம பலம் பெற உணவைக் கட்டுப்படுத்து! மனத்தைக் கட்டுப்படுத்து! விரதம் இரு! பாத யாத்திரை மேற்கொள்! இங்கே எந்த மாத்திரையும் வேலை செய்யாது மகனே! சக்தி மாத்திரைதான் வேலை செய்யும்!”

## விதவைகட்கும் உரிமை உண்டு

“மனைவியை இழந்த கணவனுக்கு இருமுடி செலுத்த உரிமை இருப்பது போல, கணவனை இழந்த விதவைகளும் விரதம் இருந்து இருமுடி செலுத்த உரிமை உண்டு.”

## தடைகளை மீறிக்கொண்டு வா!

“என்னிடம் வரமுடியாதபடிப் பல தடைகள் வரும். அவற்றையும் மீறிக்கொண்டு வர வேண்டும். அப்போது என் அருள் உண்டு.”

## துன்பங்களிலிருந்து விடுபட...

“துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் காலை ஆறு மணிக்குள் எழுந்து 108, 1008 படித்து தியானம், மௌனம் கடைப்பிடிக்க வேண்டும். தொடர்ச்சியாக இருமுடி ஏந்தி வர வேண்டும். தாய் தந்தையரிடம் பாசம் இருக்க வேண்டும். ஆன்மிக உணர்வினால்தான் இன்றைய கொடுமைகளைக் கட்டுப்படுத்த முடியும்.”




## *மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு*

### ஆன்மா வளர்ச்சியடைய...

“பூமியில் உற்பத்தி பெருகத் தண்ணீர் தேவை. அதுபோல உள்ளம் வளர ஆன்மா தேவை. ஆன்மா வளரத் தொண்டும் பக்தியும் தேவை”.

### தாவர இனமும் - மனித இனமும்

“தாவரங்கள் விதை, வேர், கிளை என்பவற்றின் மூலம் வளர்ச்சி அடையும். அதுபோல மனிதன் ஆன்மா ஒன்றின் மூலம்தான் வளர்ச்சி அடைய முடியும். தாய் கொடியவளாக இருந்தாலும் அவளுக்கும் பாசம் உண்டு. ஆன்மா இல்லையென்றால பாசம் இருக்காது”.

### ஆன்மாவும் உடலும்

“ஆன்மாவுக்காக உடலா? உடலுக்காக ஆன்மாவா? என்று நினைக்கத் தோன்றும். ஆன்மாவுக்காகவே உடல் என்று நினைத்தால் நல்லது நடக்கும். உடலுக்காகவே ஆன்மா என்று நினைத்தால் தீயது நடக்கும். உடலுக்கு அழகுண்டு. ஆன்மா உண்டு. தெய்வம் உண்டு. பிறப்புண்டு. வளர்ச்சி உண்டு. அழிவும் உண்டு.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 17 | 01.01.2017 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 28 | 12.01.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| தை | 01 | 14.01.2017 | சனி | தைப்பொங்கல் |
| தை | 14 | 27.01.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| தை | 27 | 09.02.2017 | வியாழன் | **சித்தர்பீடத்தில் தைப்பூச ஜோதிப் பெருவிழா** |
| மாசி | 14 | 26.02.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மாசி | 19 | 03.03.2017 | **வெள்ளி** |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 77ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 28 | 12.03.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| பங்குனி | 14 | 27.03.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| பங்குனி | 16 | 29.03.2017 | புதன் | **தெலுங்கு வருடப்பிறப்பு** |
| பங்குனி | 28 | 10.04.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2017 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 13 | 26.04.2017 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | **சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா** |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

### ஏழைகட்கு இருமுடி

"எத்தனை ஏழைகட்கு இருமுடி அணிய வைத்து அழைத்துக் கொண்டு வருகிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு உனக்குப் பலன் உண்டு".

### ஒன்பதுடன் நிறுத்திக்கொள்ளாதே

"தொடர்ந்து இருமுடி செலுத்து! ஒன்பது மாலை போதும் என்று நிறுத்திக் கொள்ளாதே! நீ செலுத்தும் ஒவ்வொரு இருமுடிக்கும் கட்டாயம் பலன் உண்டு."

- **அன்னையின் அருள்வாக்கு**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2017 | ஞாயிறு | மார்கழி | 17 | ஆங்கிலப் புத்தாண்டு |
| 02.01.2017 | திங்கள் | மார்கழி | 18 | சதுர்த்தி விரதம் - திருவெம்பாவை பூஜாரம்பம் |
| 03.01.2017 | செவ்வாய் | மார்கழி | 19 | திருவெம்பாவை பூஜாரம்பம் |
| 04.01.2016 | புதன் | மார்கழி | 20 | விநாயக ஷஷ்டி விரதம் |
| 08.01.2017 | ஞாயிறு | மார்கழி | 24 | கார்த்திகை விரதம் |
| 10.01.2017 | செவ்வாய் | மார்கழி | 26 | பிரதோஷ விரதம் |
| 12.01.2017 | வியாழன் | மார்கழி | 28 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்பேர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.01.2017 | சனி | தை | 01 | **தைப்பொங்கல்** |
| 15.01.2017 | ஞாயிறு | தை | 02 | சங்கடஹர சதுர்த்தி<br>**திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்பேர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 23.01.2017 | திங்கள் | தை | 10 | விநாயகர் ஏகாதசி விரதம் |
| 25.01.2017 | புதன் | தை | 12 | பிரதோஷ விரதம் |
| 27.01.2017 | வெள்ளி | தை | 14 | அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர் |
| 31.01.2017 | செவ்வாய் | தை | 18 | சதுர்த்தி விரதம் |
| 02.02.2017 | வியாழன் | தை | 20 | ஷஷ்டி விரதம் |
| 04.02.2017 | சனி | தை | 22 | கார்த்திகை விரதம் |
| 08.02.2017 | புதன் | தை | 26 | பிரதோஷ விரதம் |
| 09.02.2017 | வியாழன் | தை | 27 | தைப்பூச பெருவிழா – தைப்பூச ஜோதி ஏற்றல் - மே.மருவூர் |
| 24.02.2017 | வெள்ளி | மாசி | 12 | மஹாசிவராத்திரி விரதம் |
| 26.02.2017 | ஞாயிறு | மாசி | 14 | அமாவாசை வேள்வி – மேல்மருவத்தூர் |

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும்**
**அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்

### ஆன்மா எடுபடும்

"உவர் நிலத்தில் நல்ல விதையை விதைத்தாலும் பலன் கிடைக்காது. நல்ல நிலத்தில் விதையை விதைப்பதால் பலன் கிடைக்கும். அதுபோல உள்ளம், எண்ணம், செயல் ஆகியன ஒன்றாக இருந்தால் ஆன்மா எடுபடும்."

- அன்னையின் அருள்வாக்கு